# திருப்புகழமிர்தம்

மலர் 18 | விஜய ஆவணி | இதழ் ...

445
3-53



20 AUG 1953
DIGITIZED
18738

"பரிவா ஜெகத்தில் முருகா எனச்சொல்
பகர்வாழ் வெனக்கும் அருள்வாயே"

உள்நாடு
ரூ. 2-0-0

ஆசிரியர்: கிருபானந்தவாரி

...ப்பேட்டை ......... சென்னை

# THIRUPPUGAL AMIRTHAM PRESS,

Chintadripeta, Madras-2.

## MEMORANDUM OF BOOKS PRINTED.

| | |
|---|---|
| 1. The title of the book and the contents of the title page. | Tiruppugalamirtham Monthly Aug 1953 Vol 18. no 5 |
| 2. The language in which the book is written: | Tamil 6C |
| 3. The name of the (a) author, (b) translator or (c) editor of the book or any part thereof: | Editor, Kirupanandavari |
| 4. The subject: | Philosphy & religion |
| 5. (a) The place of printing and (b) the place of publication: | A.) & (B) 144. Swaminaicken St Chintadripet, Madras 2 |
| 6. (a) The name or firm of the printer and (b) the name or firm of the publisher: | A.) & (B) Madusoodanasivam |
| 7. The date of issue from the press or of the publication: | 17-8-53 |
| 8. The number of sheets, leaves or pages. | 28 Pages |
| 9. The size: | Demy octavo |
| 10. The first, second or other number of edition: | First Edition |
| 11. The number of copies of which the edition consists: | 3750 |
| 12. Whether the book is printed or lithographed: | Printed |
| 13. The price at which the book is sold to the public: | Annas three. |
| 14. The name and residence of the proprietor of the copy-right or any portion of such copyright. | Kirupanandavari 144. Swaminaicken St Chintadripet, Madras 2 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 AUG 1953
MADRAS

I declare that the above entries are correct & true to the best of my knowledge & belief.

Chintadripet
18.8.53

M. R[illegible]
For M. Madusoodanasivam
Printer & Publisher

3rd Quarter 1953

P.

No. 445

20. 8. 53

# திருவருள் தவநெறி மன்றச் சார்பில் நடந்த சொற்பொழிவுகள்

## சொற்பொழிவாளர்: திரு. திருமாமணுள சிவம்

| நாள் | | ஊர் | பேசிய பொருள் |
|---|---|---|---|
| விஜய ஆடி | | | |
| 1. | 4உ | படப்பை | 'பக்தி' |
| 2. | 15உ | காங்கேயநல்லூர் | 'சிறுத்தொண்ட நாயனர்' |
| 3. | 16உ | வேலூர் | 'கந்தனும் திருப்புன்கூரும்' |
| 4. | 21உ | காட்டுமன்னார்கோயில் | 'கைத்தல நிறைகனி' |
| 5. | 22உ | சிதம்பரம் | 'பட்டினத்தார்' |
| 6. | 24உ | பட்டவாய்த்தலை | 'காரைக்காலம்மை' |

## சித்தாந்த பிரசங்காமிர்தம் P. C. சமரபுரி முதலியார்

| | | | |
|---|---|---|---|
| விஜய ஆனி | | | |
| 1 | 3உ | சென்னை ராயப்பேட்டை | 'கந்தர் கலிவெண்பா' |
| 2 | 20உ | திருவேட்டீச்சுரன்பேட்டை | 'ஆண்டவனும் ஆன்மாவும்' |
| 3 | 30உ | கச்சபேஸ்வரர்சுவாமி கோயில் | 'திருவாசகம்' |
| 4 | 31உ | ,, சென்னை | 'அமர்நீதி நாயனர்' |
| விஜய ஆடி | | | |
| 5 | 14உ | ஸ்ரீசுந்தரேஸ்வரர்கோயில் இராயப்பேட்டை சென்னை | 'ஆலய வழிபாட்டு முறை' |
| 6 | 17உ | முத்தியால்பேட்டை சென்னை | 'சைவ சமயம்' |
| 7 | 18உ | ,, | 'திருவாசகம்' |

## சொற்பொழிவாளர்: திரு. க. முத்துசாமி பிள்ளை.

| | | | |
|---|---|---|---|
| விஜய ஆடி | | | |
| 1. | 2உ | சேலம் | 'விநாயகர் பெருமை' |
| 2. | 4உ | முத்தகாபட்டி | 'சீதை திருமணம்' |
| 3. | 6உ | எருமைப்பட்டி | ,, |
| 4. | 9உ | திருச்செங்கோடு | 'புனிதவதியார்' |
| 5. | 11உ | மோகனூர் | 'கூனி சூழ்ச்சி' |
| 6. | 15உ | சேந்தமங்கலம் | 'மந்தரை சூழ்ச்சி' |
| 7. | 16உ | காரைக்குறிச்சி | 'அன்பு' |
| 8. | 18உ | திருச்செங்கோடு | 'கண்ணன் தூது' |
| 9. | 20உ | நாமக்கல் | 'கல்வியும் கேள்வியும்' |

---

திருமிகு திருமாமணுளசிவம் அவர்கள் முயற்சியால் ஆடி மீ 15உ ல் காங்கேயநல்லூரில் மதுரை திருவருள் தவநெறி மன்றத்தின் கிளைமன்றம் தொடங்கப்பட்டது.

திருமிகு- சிவக்குமார் திருநாவுக்கரசனர் அவர்கள் முயற்சியால் ஆனி 27உல் பாச்சூரிலும், ஆடிமீ 1உ கோவிற்பட்டி வட்டம் முறிக்க மீண்டான்பட்டியிலும், 24—7—53ல் கோவிற்பட்டியிலும், மதுரை திருவருள் தவநெறி மன்றத்தின் கிளைமன்றங்கள் நிறுவப்பட்டன.

மன்றத்தின் சார்பாக வார வழிபாடு மேற்படி இடங்களில் நடைபெற்று வரும். இன்னும் அநேக ஊர்களில் மேற்படி கிளை மன்றங்கள் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

உ

முருகா

## காங்கேயநல்லூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில்

# ஸ்கந்தஷஷ்டி லக்ஷார்ச்சனை

எல்லா நலங்களையும் எய்தி இருநிலத்தில்
உல்லாசமாக உயர்வடைவர் — நல்லோர்வாழ்
காங்கேய நல்லூர்வரும் கந்தவேள் பெருமான் திருவடியைப்
பாங்காகப் போற்றுவோம்.

20 AUG 1953

மெய்யன்புடையீர்!

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு, அண்ணலும் அதுகண்டு அருள் செய்யா நிற்கும்" என்ற தமிழ் மறையின்படி இறைவனைப் பல மலர்கள் இட்டு வழிபடுதல் வேண்டும். லட்சார்ச்சனை மிகவும் சிறந்த வழிபாடாகும். அதன் சிறப்பைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுமாறு காண்க.

பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினர்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே.

ஆதலின் கந்தர் சஷ்டியின்போது ஆறுமுகப் பெருமானுடைய ஆறு திருமுகங்களுக்கு ஆறு நாட்களிலும் ஆறு சிவாச்சாரியர்கள் 18 காலங்களில் நூற்றெட்டு ஆயிரம் மந்திரங்களைக் கூறி, ஆறுவகை மலர்களினல் அர்ச்சித்து வழிபட ஏற்பாடு செய்துளது. அன்பர்கள் அனைவரும் இப்பெரும் புண்ணியத்தில் பங்கெடுத்துக் கொள்வார்களாக; முருகவேள் முழுமுதற் கருணை முன்னின்று துணைபுரிக.

**7—11—53 சனிக்கிழமை முதல் 12—11—53 வியாழக்கிழமை முடிய**
**12—11—53 வியாழக்கிழமை ஸ்கந்தஷஷ்டி.**

காங்கேயநல்லூர் }
15—8—53 }

**திருப்புகழ் சபையார்**

---

குறிப்பு:— இவ்விரண்டு இலக்ஷார்ச்சனையில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் அன்பர்கள் அருச்சனை ஒன்றுக்கு ரூபாய் ஆறு வீதம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். தபால் மூலம் பணம் அனுப்ப விரும்பும் அன்பர்கள் 'திருப்புகழமிர்தம் ஆபீஸ், 144 சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.' என்னும் விலாசத்திற்கு 5—11—53க்குள் சேருமாறு அனுப்பித்தர வேண்டுகின்றோம். சென்னையிலுள்ள அன்பர்கள் திருப்புகழமிர்தம் காரியாலயத்தில் நேரே செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு ஆவணித் திங்கள் ஆகஸ்ட்-1953 | இதழ் 5

## திருப்புகழ்

### பொது

அடைப டாது நாடோறும் இடைவிடாதுபோம்வாயு
அடைய மீளில் வீடாகு மெனநாடி-
அருள்பெ ருவ நாசார கருமயோகி யர்காமல்
அவனி மீதி லோயாது தடுமாறும்;

உடலம் வேறு யான்வேறு கரணம் வேறு வேருக
உதறி வாச காதீத அடியூடே-
உருகி ஆரி யாசார பரம யோகி யாமாறுன்
உபய பாத ராசீக மருள்வாயே;

வடப ராரை மாமேரு கிரியெ டாந டாமோது
மகர வாரி யோரேழு மழுதாக-
மகுட வாள ராநேர்வ மதிய நோவ வாரீச
வனிதை மேவு தோளாயி ரமுநோவக்;

கடையு மாதி கோபாலன் மருக சூலி காபாலி
புதல்வ கான வேல்வேடர் கொடிகோவே-
கனக லோக பூபால சகலலோக ஆதார
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

## பதவுரை

வட பரு அரை மா மேரு கிரி எடா நடா – வடதிசையில் உள்ளதும் பருத்த அடியுடன் கூடியதும் பெரியதுமாகிய மேருமலையை எடுத்துக் கடலில் நட்டு, மோது மகரவாரி ஓர் ஏழும் அமுது ஆக – அலைகள் மோதுகின்றதும் மகர மீன்கள் வாழ்கின்றதுமாகிய ஏழு கடல்களையும் அமுதந் தோன்றும் பொருட்டு, மகுட வாள் அரா நோவ – பணாமகுடங்களுடன் கூடிய ஒளியுள்ள வாசுகி என்ற அரவம் நோவவும், மதியம் நோவ – (மத்தின் தறியாக நிறுத்திய) சந்திரன் நோவவும், வாரீச வனிதை மேவு தோள் ஆயிரமும் நோவ – தாமரை மலரில் வாழும் திருமகள் வாழும் ஆயிரந் தோள்களும் நோவவும், கடையும் ஆதிகோபாலன் மருக – கடைந்த முதல்வராகிய திருமாலின் மருகரே! சூலி காபாலி புதல்வ – முத்தலைச் சூலத்தையும் பிரம கபாலத்தையும் ஏந்திய சிவபெருமானுடைய திருக்குமாரரே! கான வேல் வேடர் கொடி கோவே – கானகத்தில் வாழ்பவரும் வேலை ஏந்தியவருமாகிய வேடர்களுடைய புதல்வியாகிய வள்ளியம்மையாரது கணவரே! கனகலோக பூபால – பொன்னுலகத்தையும் மண்ணுலகத்தையும் காத்தருள்பவரே! சகல லோக ஆதார – எல்லா வுலகங்கட்கும் ஆதாரமானவரே! கருணை மேருவே – கருணையில் மேருமலை போல் உயர்ந்தவரே! தேவர் பெருமாளே – தேவர் போற்றும் பெருமையின் மிக்கவரே! அடைபடாது – தங்குதலின்றி, நாள் தோறும் – நாள்தோறும், இடைவிடாது போம்வாயு – இடையறாது வெளிப்பட்டுப் போய் திரும்பும் பிராணவாயுவானது, அடைய மீளில் வீடு ஆகும் என நாடி – நிறைந்து மீண்டு உடலுக்குள் கும்பித்து நிற்குமாயின் முத்தி வீடு கிட்டும் என்று எண்ணி, அருள்பெறு – திருவருளைப் பெறாத, அநாசார – சைவாசாரமில்லாத, கருமயோகி ஆகாமல் – கர்மயோகியாக அடியேன் ஆகாமற்படிக்கு, அவனி மீதில் – பூமியில், ஓயாது தடுமாறும் – ஒழியாமல் உழல்கின்ற, உடலம் வேறு – இந்த உடம்பு வேறு, யான் வேறு – உயிராகிய யான் வேறு, கரணம் வேறு – உடம்புக்குள் நின்று இந்த உடம்பைத் தொழிற்படுத்துகின்ற அந்தக் கரணங்கள் வேறு, வேறு ஆக உதறி – இவைகள் வேறாக நிற்க உதறித்தள்ளி, வாசக அதீத – சொற்களுக்கு எட்டாததாகிய, அடி ஊடே உருகி – திருவடியை உன்னி உள்ளம் உருகி, ஆரிய ஆசார – குருபரம்பரையாக வந்த ஒழுக்கமுடைய, பரமயோகி ஆமாறு – பெரிய சிவயோகி யாகுமாறு, உன் உபயபாத ராசிகம் அருள்வாயே – தேவரீருடைய இரண்டு திருவடியில் பொருந்துவதை அருள்புரிவீர்.

187380



## பொழிப்புரை.

வடதிசையில் உள்ளதும் பருத்த அடியை உடையதும் மிகப் பெரியதுமாகிய மேருமலையை மத்தாக எடுத்து நட்டு, அலைகள் மோதுகின்ற ஏழு கடல்களையும் அமுதம் உண்டாகும் பொருட்டு, தாம்பாகப் பிடித்த வாசுகியின் ஒளிமிக்க பணாமகுடம் நோவவும், தறியாக நிறுத்திய சந்திரன் நோவவும், தாமரை மலரில் வாழுகின்ற திருமகள் உறைகின்ற ஆயிரந் தோள்களும் நோவவும், கடைந்த ஆதிமூலமாகிய கோபால மூர்த்தியின் திருமருகரே! திரிசூலமும் அயன் கபாலமும் தரித்த சிவபெருமானுடைய திருக்குமாரரே! காட்டில் வாழுகின்ற வேலை ஏந்திய வேடர் குமாரியாகிய, வள்ளியம்மையாருடைய மணாளரே! பொன்னுலகத்தையும் மண்ணுலகத்தையும் காத்தருள்பவரே! எல்லா வுலகங்கட்கும் ஆதாரமானவரே! கருணையில் மேருமலைபோல் உயர்ந்தவரே! தேவர்கள் போற்றும் பெருமிதமுடையவரே! தங்குதல் இன்றி நாள்தோறும் இடையறாது போய் மீளுகின்ற பிராண வாயுவானது, அடைபட்டுக் கும்பித்தால் முத்தி வீடு கூடும் என்று எண்ணி, திருவருள் பெறாத அநாசாரமுள்ள கருமயோகியாக அடியேன் ஆகாமல், பூமியில் ஒழியாமல் உழல்கின்ற இந்த உடலம் வேறு, யான் வேறு, அந்தக்கரணங்கள் வேறு வேறாக உதறித் தள்ளி, சொற்களுக்கு எட்டாத திருவடியை நினைந்து உள்ளம் உருகி, குருவழியாக வந்த ஆசார சீலமுள்ள பெரிய சிவயோகியாகுமாறு தேவரீருடைய இரண்டு திருவடிகளைப் பொருந்தும் தன்மையை அருள்புரிவீர்.

### விரிவுரை

அடைபடாது நாடோறும் இடைவிடாது போம் வாயு:—

பிராணவாயு எப்போதும் நமது முயற்சியின்றியே இடைவிடாது சரித்துக் கொண்டிருப்பது. நின்றாலும் சென்றாலும் கிடந்தாலும் இருந்தாலும் எழுந்தாலும் துயின்றாலும் அயின்றாலும் அது தடைபடாது சஞ்சரிக்கும். உயிர் வாழ்வின் ஆணிவேர் பிராணவாயு; அது இன்றி உயிர் உடம்போடு கூடியிராது. அது சிறிது சிறிதாகக் கழிந்து விடுகின்றது.

அடைய மீளில் வீடாகும் எனநாடி:—

பிராணவாயு கீழ் நோக்காகக் கழியாமல் மீண்டு நிற்குமாறு செய்வதுவே முத்தி வீடு என்று அடயோகிகள் எண்ணுவர்;

இவ்வாறு எண்ணுதல் பிழை. இது ஹடயோகக் கொள்கை. இது முத்திக்குச் சாதன மன்று. வாயுவைக் கும்பகஞ் செய்து நிறுத்துதல் நெடுநாட்களுக்கு இந்த உடம்பை நிறுத்துமே யன்றி முத்தியைத் தராது.

"யோகம் சித்த நிரோத:" என்றபடி மனத்தை ஒருமைப் படுத்துவதே யோகம் என உணர்க. வாயுவைப் பிடித்து அடக்க மனம் அடங்கும். ஆனால் வாயு வெளியே செல்லும் போது மனம் முன்னைவிடப் பன்மடங்கு வேகமாகச் செல்லும். ஒரு கிளையை வலுவாக இழுத்து வளைத்துப் பிடித்தால் அது தாழும். ஆனால் வளைத்து வைத்திருந்த பிடி சற்று நழுவுமானால் முன்னைவிட உயரமாக எழுந்து நிற்கும். தானே வளைந்த கிளை அவ்வாறு உயராது. ஆகவே சிவ சிந்தையால் தானே மனம் அடங்குமாறு செய்வதுவே முறை. அதுவே சிவயோகம். அவ்வாறு மனம் அடங்கியபோது வாயுவும் தானே அடங்கும்; அதுவே சிவயோகம் எனப்படும். அச் சிவயோகம் சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தைத் துய்க்கத் துணைபுரியும். ஆகவே ஹடயோகத்தைக் கொள்ளாது, சிவயோகத்தைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். அடிகளார் ஹடயோகத்தைக் கண்டித்து சிவயோகத்தைப் பாராட்டியுள்ள பாடல்களைக் காண்க.

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னும்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

காட்டில்குறத்திப் பிரான் பதத்தே கருத்தைப் புகட்டில்
வீட்டில் புகுத மிகஎளிதே விழி நாசி வைத்து
மூட்டிக் கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித் தெங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே.
—அலங்காரம்

"அனித்த மானவூனாரு மிருப்பதாக வேநாசி
அடைத்து வாயுவோடாத வகைசாதித்
தவத்தி லேகுவால்மூலி புசித்து வாடு மாயாச
அசட்டுயோகி யாகாமல் மலமாயை
செனித்த காரி யோபாதி ஒழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான்வேறெ னுடல்வேறு
செகத்தியாவும் வேறாக நிகழ்ச்சியா மனோதீத
சிவச் சொரூப மாயோகி எனஆள்வாய்
—திருப்புகழ்.



அருள்பெறு அநாசார கருமயோகி:—

திருவருள் தாகத்துடன் இறைவனை நாடி அகங்குழைந்து உருகிப் பாடி அன்பு செய்யாதவர்கட்குத் திருவருட் செல்வம் கிட்டாது. திருவருள் பெறாதார் முத்தியின்பம் எய்தப் பெறார். அவர்கட்கு ஆன்றோர் ஆசாரமும் அமையாது. சிவஞானத்தைப் பெறாத அவர்கள் கருமயோகி எனப்படுவார்கள்.

உடலம் வேறு யான் வேறு கரணம் வேறு வேறாக உதறி:—

ஞானநூல் தெளிவில்லாதவர்கள் உடலமே ஆன்மா என்றும், கரணங்களே ஆன்மா என்றும், கூறி மலைவு எய்துவர். உடம்புடன் கூடியிருக்கின்றபோது சிவயோக நிலையில் உடம்பு வேறு கருவி கரணங்கள் வேறு எனக் கண்டு அவைகளினின்றும் பிரிந்து தன்னந் தனியாக நின்று இன்புறுவர். அவ்வாறு தன்னந் தனியாக நின்ற நிலையில் உண்டாகும் இன்பம் அளவற்றதாகத் திகழும்.

"தன்னந்தனி நின்றது தானறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப்பதுவோ" —அநுபூதி.

அடியூடே உருகி:—

திருவடி ஞானமே என உணர்க. அத் திருவடியை உன்னி உன்னி உள்ளம் உருகுதல் வேண்டும். உருகும் அடியார் உள்ளத்தில் இறைவனுடைய அருட்காட்சி தோன்றும்.

"முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்" — அநுபூதி.

"குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வண நிருதர் கலகா பிறைச்சடையர்
குருவென நல்லுரையுதவு மயிலா எனத்தினமும் உருகாதே"
—திருப்புகழ்.

ஆரியாசார:—

ஆரியன்—ஆசாரியன்.

குருநாதன் வழியாக வந்த ஒழுக்கம். வழிவழியாக வந்த ஒழுக்கம் உயர்ந்தது. "பரம்பரை மருத்துவம், பரம்பரை ஜோதிடம் உயர்ந்தவை என்க.

"தங்களாணவ மாயை கருமம
லங்கள் போ யுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ"

—திருப்புகழ்.

பரம யோகி:—

பரம—பெரிய. பரமயோகி—சிவராஜ யோகி. சிவயோகத்தின் நுணுக்கத்தை நன்கு தெளிந்து அதனை நமக்கு உபதேசிக்கின்றார் அருணகிரிநாதர். பல பாடல்களில் அதன் சிறப்பை ஓதுகின்றார். திருமூலருக்குப் பின் சிவயோகத்தைத் தெளிவாகக் கூறியவர் அருணகிரிநாதர் ஒருவரே என உணர்க.

"சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமும் ஏகவடிவம
தன்சொருபம தாகவுறைவது சிவயோகம்"

உபயபாத ராசீகம் அருள்வாயே:—

சிவயோக நிலையைப் பெற்று திருவடியில் பொருந்தும் பெற்றியை அடிகளார் வேண்டுகின்றனர்.

வடபராரை:—

பரு அரை என்பது பராரை என வந்தது. இவ்வாறு திருமுருகாற்றுப்படையிலும் "இருள்படப் பொதுளிய பராரை மரா அத்து" என வந்திருக்குமாறு காண்க.

அமுதத்தை வேண்டி கடல் பானையாகவும், மந்த்ரமலை மத்தாகவும், சந்திரன் தறியாகவும், வாசுகி தாம்பாகவும் கொண்டு திருமால் கூர்மவடிவு கொண்டு அம்மலையைத் தாங்கி, அவருடைய ஆயிரங்கரங்களையும் கொண்டு அசுரர் சுரர் என்பார்களுடன் கடைந்தனர்.

"மாக முகடோ டகில பாதாள மேருவுட
னேசுழல வாரியது வேதாழியாவமரர்
வாலிமுத லானவர்க ளேனோர்களாலமுது கடைநாளில்
வாருமெனவே ஒருவர் நோகாம லாலவிட
மீசர்பெருமானுதவி யேதேவர் யாவர்களும்
வாழ அமுதே பகிரு மாமாய னரினிய மருகோனே"

—திருப்புகழ்.

அவ்வாறு கடையும்போது அரவமும் திங்களும் நொந்தன.

"மகுடவாளரா நோவ மதியநோவ"



திருமகள் உறைகின்ற இடத்தில் சோம்பலும் மயக்கமும் அயர்ச்சியும் இரா. ஊக்கமும் ஆக்கமும் சுருசுருப்பும் மிகுதியாக இருக்கும். திருமகள் உறைகின்ற ஆயிரந் தோள்களுந் திருமாலுக்கு நொந்தன என்பதனால் கடல் கடைவதன் அருமையை உணர்த்துகின்றார். "வாரீச வனிதை மேவு தோளாயிரமு நோவ" என்பார்.

கனகலோக பூபால:—

கனகலோகம்—பொன்னுலகம். பூ—பூவுலகம். பாலன்—இரட்சிக்கின்றவன். முருகவேள் பொன்னுலகம் மண்ணுலகம் என்ற இரண்டையும் காப்பாற்றுபவர்.

சகலலோக ஆதார:—

எல்லா வுலகங்கட்கும் அப் பரமபதியே ஆதாரமானவர்.

"தொடுத்த நீப வேல் வீர சமஸ்தலோக பூபால"

கருணைமேரு:—

மலைகளுக்குள் உயர்ந்தது மேருமலை. முருகன் கருணையில் மேருமலையிலும் உயர்ந்தவர்.

## கருத்துரை

**திருமால் மருகரே! சிவபுதல்வரே! வள்ளி மணவாளரே! ஹடயோகத்தை விடுத்து சிவயோகத்தை யடுத்து திருவடிசார அருள்புரிவீர்.**

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

98. உயிரைக் கொடுத்தாவது மானத்தைக் காத்துக் கொள்க. ஏன்? உயிர் சாஸ்வதமல்ல. மானம் எக்காலத்தும் மாள்வதில்லை.

99. போதும் என்ற மனம் இல்லா பிராம்மணன் கெட்டுவிடுவான். போதும் என்ற மனம் படைத்த மன்னன் விருத்தியடையாமல் கெட்டுவிடுவான். நாணம் பூண்ட தாசி பொருள் சம்பாதிக்கமாட்டாள். கற்பை காத்துக்கொள்ளாத குல மகள் நசித்துவிடுவாள்.

100. உத்தம மாணாக்கன் உல்லாசமும் உரக்கமும் அறியான். பசித்தவன் ருசியும் வாசனையும் பாரான். பண ஆசை கொண்டவன் குருவையும், பந்துவையும் கவனியான். காமப் பித்தன் பயமும் வெட்கமும் அறியான்.

உ

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## சேரமான் பெருமாள் நாயனார் புராணம்

"கார்கொண்ட கோடைகழறிற் றறிவார்க்கு மடியேன்"

வளமை மிகுந்த மலைநாடு என்று புகழ்பெற்ற சேர நாட்டின் தலைநகரம் கொடுங்கோளூர். சிவபெருமான் எழுந்தருளி யுள்ள திருவஞ்சைக்களம் என்ற திருத்தலத்தின் அருகில் அது விளங்குவது.

காலையில் எழுகின்ற கலையொலியும், யானைக் கன்றுகள் முழக்கமும், சோலையில் வண்டுகளின் ஒலியும், பாடல் ஆடல் களின் ஒலியும் கடல் ஒலியின் மிக்கனவாக ஒலித்தன; வீடுகள் தோறும் இன்பமும், நெருங்கிய சாலைகள்தோறும் அறங்களும், மடங்கள்தோறும் சைவமேன்மை விரிவுரைகளும் திகழும். வேத நெறி நின்று விதிப்படி அனைவரும் உயிரினும் உயர்ந்ததாக ஒழுக்கத்தைக் கருதி வாழ்ந்தார்கள். சோலைகள் சூழ்ந்த அந் நகரத்திற்கு மகோதை என்று மற்றொரு பேரும் உண்டு.

கலியை யகற்றி அறந் தழைக்கும்பொருட்டு சேரர் குலமும் உலகுஞ் செய்த தவப்பயனாக சேரமன்னர் மரபில் பெருமாக் கோதையார் அவதரித்தனர். மலர் மழை சிந்தியது. உலகில் உள்ள எல்லாவுயிர்களும் உவகையுற்றன. பெருமாக்கோதை இனிது வளர்ந்தார். முன்னைத் தவத்தின் பயனால் முக்கட் பெருமானையே சிந்தித்து வருவார். அளவுமிக்க அன்புடைய அவர் அரசபோகத்தையும் அரண்மனை வாழ்வையும் விரும்பா தவராகி, திருவஞ்சைக்களம் என்ற திருத்தலஞ் சென்று அங்கு திருக்கோயில் திருத்தொண்டுகளைப் புரிந்து வருவாராயினார்.

உலகி னியல்பு மரசியல்பும் உறுதி யல்ல எனவுணர்வார்
புலரி எழுந்து புனல்மூழ்கி புனித வெண்ணீ றினுமூழ்கி
நிலவு திருநந் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையும் கொணர்ந்துதிரு மாலை சாத்த மகிழ்ந்தமைத்து.

திருமஞ்சனமுங் கொணர்ந்துதிரு அலகு மிட்டுத் திருமெழுக்கு
வருமன் புடன்இன் புறச்சாத்தி மற்று முள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியில் உணர்வுவர ஓதிப் பணிந்தே ஒழுகுநாள்.



உலக போகமும் அரச போகமும் நீர்மேல் எழுத்துக்கு நிகர் என்று சிவனருளால் உணர்ந்த அவர் அதிகாலையில் நீரில் முழுகி, திருநீறு நிரம்பப் பூசிக்கொண்டு, திருநந்தன வனஞ் சென்று, இறைவனுக்கு மலர்களைத் தருகின்ற செடி கொடிகளுக்குக் களையெடுத்து, நீர் பாய்ச்சி, மாலை மலரக் கூடிய மல்லிகை முல்லை முதலிய மலர்களையும் காலை மலர்ந்த மலர்களையும் எடுத்து, பல வகையான மாலைகளைத் தொடுத் துக் கொண்டு, திருக்கோயிலுக்குள் சென்று, கூட்டி மெழுகி, ஒருமைப்பட்ட மனத்துடன் உள்ளம் உருகிப் பாடி வழிபாடு செய்துவந்தார்.

அக்காலை மகோதை என்ற கொடுங்கோளூரில் இருந்து சேரநாட்டை அரசுபுரிந்துவந்த "செங்கோற் பொறையன்" என்னும் அரசர் பிறப்பெனும் பெருங்கடற்குத் துறப்பெனும் தெப்பமே துணை யென்று துணிந்து நாட்டைத் துறந்து காட்டை யடைந் தார். மதிநல மிகுந்த மந்திரிமார்கள் இனி அரசுக்கு உரியார் யார் என்று சிலநாள் ஆராய்ந்து அரசுக்கு உரியார் பெருமாக் கோதையாரே என்று தெளிந்தார்கள். ஆனை தேர் பரி முத லியவைகளுடன் திருவஞ்சைக்களத்தை யடைந்தார்கள். சென்ற அவர்கள் பெருமாக்கோதையாரைக் கண்டு மண்மிசை வீழ்ந்து பணிந்து, "சேரநாட்டுக்கு உரிமையினால் தாங்கள் மன்னராக வேண்டியவராக இருக்கின்றீர். ஆகவே முடிசூடிக் கொண்டு உலகை யரசு செய்வதற்கு எழுந்தருளும்" என்று வேண்டினின்றார்கள்.

இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூறாக இவர்மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்கும் அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை யிடைபெற்றறிவேன் எனப்புக்கு
முன்புதொழுது விண்ணப்பஞ் செய்ப முதல்வர் அருளினால்.

மேவு முரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலுந் தண்டாத கொடையும் படைவாகன முதலாங்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாங் கைவந் துறப்பெற்றார்.

அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட சேரமான் பெருமாள் நாயனார் "இன்பம் மிகுந்துள்ள சிவத்தொண்டுக்கு இடை யூறாக இவர்கள் மொழிந்தார்கள். அன்பு நிலை மாறாமல் அரசும் புரிவதற்கு இறைவன் திருவருள் இருக்குமாயின் இறைவரிடம் விண்ணப்பஞ் செய்து அறிவோம்" என்று கருதி,

ஈசனிடஞ் சென்று, "கருணைக்கடலே! அரசு புரியும்பொருட்டு இவர்கள் அழைக்கின்றார்கள். பதவி பக்தியைக் குறைக்குமே? அரச போகத்தை அடியேன் விரும்புகின்றேனில்லையே! தேவரீர் திருவுளம் எவ்வாறோ?" என்று வினவினார். "நீ அரச பதவியை ஏற்றுக்கொண்டு, உலகில் உள்ள உயிர்கட்கு இனிய தொண்டுகளைப் புரிந்துவருவாய். எல்லா வுயிர்களுங் கழறின அனைத்தும் நீ அறியும் ஆற்றலையும், பெருவலிமையையும், எல்லையில்லாத கொடையையும், ஆயுதம் வாகனம் முதலிய அரசர்க்குரியவைகளையும் உனக்கு வழங்கினோம்" என்று சிவபெருமான் கூறி அவற்றை அவருக்குத் தந்தருளினார். இறைவனுடைய திருவருளைக் கொண்டு புறப்பட்டுக் கொடுங் கோளூரை யடைந்தார். நாளும் கோளும் நன்னிலையுற்ற ஒரு நாளில் கழறிற்றறிவாருக்கு முடிசூட்டினார்கள்.

எல்லா வுயிர்களும் தத்தம் குறைகளைக் கூறக் கேட்டு அவ்வவ் வுயிர்களுக்கு உற்ற துன்பத்தை மாற்றுவதனால் சேரமான் பெருமாள் நாயனாருக்குக் கழறிற்றறிவார் என்ற பேர் உண்டாயிற்று.

மகுடாபிஷேகம் ஆனபின் திருக்கோயில் சென்று இறைவர் முன் பணிந்து எழுந்து யானை மீது ஏறி நாயனார் நகர் வலம் வந்துகொண்டிருந்தார். உவர்மண் பொதி சுமந்த வண்ணான் ஒருவன் எதிர் வந்தான். மழை பொழிய அதனால் கரைந்த உவர்மண் அவன் உடம்பில் நிறைந்து, பின்னர் உலர்ந்து வெளுத்திருந்தது. பவனிவருகின்ற சேரர் கோன் சிவனடியார் திருவேடத்தினை நினைந்து யானையை விட்டு இறங்கிச் சென்று அவ்வண்ணான் முன் தொழுதார். சேரர் பெருமான் தொழுதலைக் கண்ட வண்ணான் மனங் கலங்கி, "அரசே! அடியேனை யார் என்று கருதினீர்? அடியேன் அடி வண்ணான்" என்றான். "நீர் வருந்தவேண்டாம். திருநீற்றினை யணிந்த அடியார் திருவேடத்தை நினைப்பித்தீர். அடியேன் அடிச் சேரன். நீர் செல்லும்" என்று கூறினார். அடியார் திருவேடத்தில் அவருக்கு இருக்கும் அளவற்ற அன்பு நிலையைக் கண்டு அமைச்சர்கள் அதிசயித்து அஞ்சலி செய்தார்கள்.

சேரர்பெருமானார் பின்னர் யானைமீது ஏறி நகர்வலம் வந்து, மணிமண்டபஞ் சென்று வெண்சாமரம் இரட்ட அரியணை மீது வீற்றிருந்தனர். சோழ மன்னனும் பாண்டியனும் இவரிடத்தில் அன்புகாட்டினார்கள். அரசர் பலரும் கப்பங்கட்ட



அகத்தும் புறத்தும் பகைவர்களை ஒடுக்கி சிவ சமயம் வளர அரசு புரிந்து வந்தார். அரசாளும் பயனும் தவப்பேறும் செல்வமும் சீரும் எல்லாம் கூத்தப் பெருமான் திருவடியே என்று தெளிந்த அறிவினால் எண்ணி, தூக்கிய திருவடியை நாளும் அருச்சித்து வழிபட்டு வந்தார்.

நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவத்து
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள்
ஆடுங் கழலே எனத்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அருச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

சிவாகமத்திற் கூறிய முறைப்படி அம்பலவாணரை வழிபாடு செய்வார். அவ்வழிபாட்டின் முடிவில் நடராஜப் பெருமானுடைய திருவடிச் சிலம்பு ஒலிகேட்டு இன்புறுவார். சிவனடியார்கட்கும் புலவர்கட்கும் வறியவர்கட்கும் நிரம்பவும் தான தருமங்களைச் செய்து மகிழ்வார். சிவபெருமானுக்குரிய வேள்விகள் பல புரிந்தார்.

இவ்வாறு இவர் கொடுங்கோளூரில் அறநெறியில் மக்களைச் செலுத்தி அரசுபுரிந்து வந்தார். பாண்டிநாட்டில் மதுரையம்பதியில், நாளும் இன்னிசை பாடித் தம்மை வழிபடும் சிறந்த அடியாராகிய பாணபத்திரருக்குப் பெருஞ் செல்வந் தர சோமசுந்தரக் கடவுள் திருவுள்ளம் பற்றினார். சொக்கலிங்கப் பெருமான் பாணபத்திரருடைய கனவில் எழுந்தருளி "என்பால் அன்பால் பாடித் திருத்தொண்டு புரியும் சேரர் மன்னனுக்கு உன் வறுமை தீர பொன்னுடைகளும் மணிப்பூண்களும், நவநிதியும் தர ஒருகடிதம் தருகின்றோம். அவ்வோலையை எடுத்துக் கொண்டு, சிறிதும் காலந் தாழ்க்காமல் போய்வா" என்று கட்டளையிட்டு திருவோலையைத் தந்தருளினார்.

பாணபத்திரர் கண்விழித்தெழுந்து இறைவன் தந்த திருவோலையை எடுத்துக் கண்களில் ஒற்றி, திருவருளை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி, அத்திருமுகத்தைச் சென்னிமேல் வைத்து, அப்பொழுதே புறப்பட்டு மலை வனம் நதி முதலியவைகளைக் கடந்து கொடுங்கோளூரை யடைந்தார். அவருடைய வரவைக் காவலர் கழறிற்றறிவார்க்கு அறிவித்தனர். மன்னர் பெருமான் கேட்டு சென்னிமேல் கைகூப்பித் தொழுது, கண்ணீர் சொரிந்து மிகவும் பரிந்து ஓடிச் சென்று இன்னிசை வல்ல பாணபத்திரரைப் பலமுறை பணிந்தார். இறைவருடைய திருமுகத்தை மன்னவரிடம் தந்து பாணரும் பணிந்தார்.

"என்னையும் ஒரு பொருளாக எண்ணி எம்பெருமான் திருமுகங் கொடுத்தருளினரே. எம்பிரான் திருவருள்தான் என்னே! என்னே!" என்று விம்மிதமுற்று திருவருளின் எளிமையை நினைந்து உள்ளம் உருகினர். கண்ணீர்மழை சிந்தினர். அத் திருமுகத்தைத் தலைமீது வைத்தார். பலமுறை மதுரையிருக்குந் திசை நோக்கிப் புவிமிசை வீழ்ந்து பணிந்தார். அத் திருமுகத்தைப் படித்தார்.

திருமுகப்பாசுரம்

மதியலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யாம் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பாலியாழ் பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

மன்னர் பெருமானர் அத் திருமுகத்தைப் பல படிகள் எழுதுவித்தார். கருவூலத்தில் இருந்த நவநிதிகள் முழுவதையும் மிச்சமில்லாமல் எடுத்துப் பொதிகளாகக் கட்டி. எருதுகளின் மேல் ஏற்றிக் கொணர்வித்தார். அப் பொருள் முடிப்புகளை யெல்லாம் பாணபத்திரருக்குக் காட்டி, யானை, குதிரை தேர் முதலியவையுந் தந்து அரசையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பாணபத்திரரைப் பணிந்தார். பாணபத்திரர் அவைகளைக் கண்டு அதிசயித்தார். அரசை யவரை யாளுமாறு செய்து, நிதிக் குவியல்களுடன் விடைபெற்றுப் புறப்பட்டார். நகர் கடக்கும்வரை உடன் சென்று கண்ணீர் சொரிந்து வழி விட்டார். மதுரையம்பதி சென்று பாணபத்திரர் இனிது இறைவனை வழிபட்டார். பாணபத்திரர் சென்ற பின்னர், சேரமான்பெருமாள் நாயனர் சோமசுந்தரப் பெருமானுடைய திருவருளை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து, அன்பு மேலிட்டு இனிது வாழ்ந்தார்.

(தொடரும்)

உ

முருகா

# கற்பு

## விருபாட்சி

எல்லாம் அவன் செயல்; நமது செயலால் ஒன்றும் நடப்பதில்லை. இதை விளக்குவது இந்த வரலாறு.

சென்னை எழும்பூரில் விஸ்வநாதன் வாழ்ந்துவந்தான். அவன் ஒரு சிறு வியாபாரஞ் செய்துகொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் உறுதி கிடையாது. உண்மை இதுவோ அதுவோ என்று ஐயுறுவான். பலப்பல எண்ணி மனதைக் குழப்பிக்கொள்வான். அவன் உள்ளத்தில் ஒரு ஆறுதல் கிடையாது. சதா அவன் மனம் சிந்தனைப் புயலால் சிதறடிக்கப்பட்டுச் சீரழியும். முப்பது ரூபாய் வாடகை வீட்டில் குடியிருந்தான். வாழ்க்கைக்குப் போதுமான வருவாய் வந்து கொண்டிருந்தது.

அவன் மனைவி விருபாட்சி நல்ல குணவதி; பிதா சிறந்த அறிவுடையராதலினல் அவள் கூர்மையான அறிவைப் பெற்றிருந்தாள். அழகில்லையானலும் அவள் அன்புள்ளவளாக இருந்தாள். அவள் ஒழுக்கமும் உண்மையும் கடைப்பிடித்து வாழ்ந்தாள். இறைவனிடத்தில் அசையாத நம்பிக்கையும் ஆர்வமுங் கொண்டவள்; சில சமயங்களில் கணவனிடத்தில் இது பற்றி வாதிடுவாள்.

விஸ்வநாதன் ஒருநாள் மனைவியை நோக்கி, "பெண்ணே! ஓயாது "கடவுளே! கடவுளே!" என்று கூறுகின்றனையே. கடவுள் ஒருபுறம் இருக்கட்டும். நான் வேண்டாம் என்று கூறவில்லை. நமது முயற்சியும் தொழிலுந்தானே முன்னேற்றத்தைத் தரும். கடவுளே வந்து நேரே ஒன்றைச் செய்கின்றரா? எடுத்ததற்கெல்லாம் கடவுள் செயல் என்று காலத்தைக் கழிக்கக் கூடாது. ஆகவே மனிதன் முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுங் கிடையாது. விதி விதி யென்று மதியை யிழக்கக் கூடாது" என்றன்.

விருபாட்சி: "அன்புள்ள ஆர்வலரே! தாங்கள் கூறுவது சரியன்று. ஈசன் அருளின்றி அணுவும் அசையாது. மனிதன் எத்தனைதான் முயன்றாலும் திருவருளாலேதான் ஒரு கருமம் முற்றுப் பெறும். "துளக்கமற வுண்ணுவனே? தொண்டை விக்கிக்கொளுமோ? சோதி திருவுளம் எதுவோ ஏது மறிந்திலனே" என்கின்றர் வடலூர் வள்ளலார். "அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் பெரிய ஆப்தர் மொழி" என்று தாயுமானர் கூறுகின்றர். "எல்லாம் கடவுள் செயல் என்று நாம் சும்மா படுத்து உறங்குதல் வேண்டும்" என்று நான் கூறவில்லை. மனித முயற்சி ஒரு அளவுக்குத்தான். அதற்கு



187380

உற்ற உதவியாக நின்று பயன்தருவது கடவுள் அருள்தான். கடவுள் கருணை கதிரொளிக்கு நிகர். மனிதனுடைய செயல் கண்ணொளிக்கு நிகர். அமாவாசை நடு இரவில் வண்டு போன்ற நல்ல கண்கள் இருப்பினும் ஒரு பொருளை யறிய முடியாது. கதிரொளி துணை செய்தாலொழிய கண் எதனையுங் காணாது. கண் போன்றது மனித முயற்சி; கதிரொளி போன்றது கடவுள் கருணை. ஆகவே கடவுள் கருணையை முன்னிட்டு எதையும் செய்யவேண்டும்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது"

என்ற திருவள்ளுவர் திருவாக்கை மறுக்க வல்லார் யாவர்? தாங்கள் இதனை யெல்லாம் நன்கு சிந்தித்து தெளிவு பெறுக" என்றாள்.

விஸ்வநாதன்:"பெண்மணி! நீ இவ்வளவு பேசுவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அழகாகவும், ஆழமாகவும் பேசுகின்றாய். பேஷ். நல்ல கருத்துக்களைக் கூறுகின்றாய். ஆனால் ஒரு சந்தேகம். எல்லாம் அவன் செயல் என்றால் ஒருவன் கொலை செய்கின்றான்; ஒருவன் பொய் பேசுகின்றான்; ஒருவன் களவு செய்கின்றான். அவைகள் யாவும் கடவுள் செயல்தானே? அப்படியானால் அவர்கள் செய்த தீமைக்குத் தண்டனை விதிப்பது முறையா? இதற்கு நீ என்ன விடை கூறுகின்றாய்?"

விருபாட்சி, "உயிர்த்துணைவரே! எல்லாம் அவன் செயல் என்பது முற்றிலும் உண்மை தான். ஆனால் அவரவர் செய்த நன்மை தீமைகட்கு உரிய இன்ப துன்பங்களை அவரவர்களே அநுபவிக்க வேண்டும். இரவில் ஒரு கூடத்தில் விளக்கு எரிகின்றது. விளக்கைச் சுற்றிச் சிலர் அமர்ந்திருக்கின்றார்கள். ஒருவர் இறைவனுடைய துதி நூல்களைப் படிக்கின்றார். ஒருவர் பொய் கணக்கு எழுதுகின்றார். ஒருவர் வேறு ஒருவனைக் கொல்ல கத்தி தீட்டுகின்றார், ஒருவர் சிவ பூஜை செய்கின்றார். விளக்கின்றி இக் கருமங்கள் நிகழமாட்டா. பூஜை செய்வதற்கும் பொய் கணக்கு எழுதுவதற்கும் விளக்கே காரணமாயினும் அதனால் வரும் நன்மை தீமைகட்கு விளக்கு காரணமன்று. அதுபோல் எல்லாச் செயல்களும் இறைவனுடைய இயக்கமின்றி நிகழாது எனினும், அதன் நன்மை தீமைக்கு இறைவன் காரணனல்லன். ஆகவே இறைவன் தந்த அறிவினால் தீமையை விலக்கி நன்மையையே செய்ய வேண்டும். அது தான் அறிவுடைமையும் அருளுடைமையுமாகும்" என்று விளக்கமாக விளம்பினாள்.

இவ்வாறு கணவனும் மனைவியும் சிற்சில சமயம் சொற்போர் நிகழ்த்துவார்கள். அதில் பெரும்பாலும் விருபாட்சியே வெற்றி பெறுவாள்.



ஒரு நாள் விஸ்வநாதன் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டான். எதிரிலே ஒரு விறகு தலையன் வந்தான். அதைக் கண்ட விருபாட்சி கணவனை நோக்கி, "சகுனம் பிழையாக இருக்கின்றது. சென்றால் ஏதாவது இடர் உண்டாகும். சற்று பொறுத்துப் போவது நல்லது" என்றாள். "அடி பயித்தியமே. சகுனமாவது சாத்தானாவது. பேசாமல் விழுந்து கிட" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

மவுண்ட்ரோடு வழி போய்க்கொண்டிருந்தான். வழியிலே ஒரு தங்கச் சங்கிலி கிடந்தது. அதைக் கண்டதும் அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி யுண்டாகியது. சட்டென்று எடுத்து சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வேகமாக நடக்கலாயினான். பளீர் என்று அவன் கன்னத்தில் ஒரு அடி விழுந்தது. விஸ்வநாதன் அயர்ந்துவிட்டான். ஒன்று மறியாமல் திகைத்தான். ஒரு போலீஸ்காரனும் ஒரு முரட்டு மனிதனும் அவன் எதிரில் நின்றார்கள். அந்த முரட்டு மனிதன் "ஏண்டா! நீ ஒரு மனிதனா! இப்போது நீ பையில் வைத்திருக்கின்ற தங்கச் சங்கிலி ஏது? அதை எடு; உண்மையைச் சொல்; இந்த சங்கிலி உன்பால் எப்படி வந்தது" என்று கேட்டான். "ஐயோ! நான் ஒருபாவமும் அறியேன். கீழே இருந்து கண்டு எடுத்தேன்" என்றான். அவனை அந்தப் போலீஸ்காரன் இழுத்துக் கொண்டுபோய் அடைத்துவிட்டான். முடிவில் அவன் அந்தச் சங்கிலியைக் களவு செய்தான் என்று தீர்மானிக்கப்பட்டு, அவன் மூன்று மாதந் தண்டிக்கப்பட்டான். அச்சங்கிலியைக் களவு செய்தவனைப் போலீஸ் தொடர்ந்ததால் அவன் கீழே எறிந்துவிட்டு இவன் மீது போலீஸ்காரனிடம் பழி சுமத்தினான். குற்றஞ் செய்தவன் வேறு; தண்டிக்கப்பட்டவன் வேறு. விஸ்வநாதன், தான் புறப்படும்போது விறகு தலையன் வந்ததும், அது சகுனப் பிழை யென்று மனைவி தடுத்ததும், தான் குற்றமே செய்யாத போது திடீர் என்று தனக்கு வந்த வினையையும் எண்ணி, அன்று மனைவி கூறிய நீதி நெறியை நினைத்துப் பார்த்தான். அவன் உள்ளத்தில் தன் செயலால் யாதும் விளையாதென்பதை யறிந்தான்.

விஸ்வநாதன் விடுதலை பெற்று வீட்டிற்கு வந்தான். அவன் தன் மனைவியை நோக்கிக் கண்ணீர் வடித்தான். கடவுள் செயலால்தான் எல்லாம் நடைபெறுகின்றதென்பதை ஒரு அளவுக்கு உணர்ந்தான்.

ஒருசமயம் கணவனும் மனைவியும் காளத்திக்குச் சென்றார்கள். பொன்முகலி நதியில் நீராடி, காளத்தியப்பரையும், ஞானப் பூங்கோதையம்மையாரையும், மலை மீதுள்ள கண்ணப்ப நாயனாரையும் வணங்கினார்கள். அன்று இரவு ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அச் சத்திரத்தின் காவலாளன்

அவர்களை மிகவும் அன்புடன் உபசரித்தான். தனித்த அறையும், உணவுக்கு வேண்டிய சாதனங்களுந் தந்தான். அளவு கடந்த அன்பு பாராட்டினான். விஸ்வநாதனும் விரூபாட்சியும் மூன்றுநாள்கள் அங்கு தங்கியிருந்தார்கள். பொன்முகலி நதியும், காளத்தியப்பர் தரிசனமும், சத்திரத்துக் காவலாளியின் அன்பும் அவர்கட்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

அக்காவலாளி விஸ்வநாதனையும் விரூபாட்சியையுங் கொன்றுவிட்டு அவர்களிடம் உள்ள ஆடையாபரணங்களை அபகரிக்கவேண்டும் என்று எண்ணினான். வஞ்சனையாகவும் சூதாகவும் நடந்துகொண்டான். அன்று மாலை பாலைக் கொணர்ந்து விஸ்வநாதனிடம் தந்து, "இது நம்ம வீட்டுப்பால். அம்மாவும் நீங்களும் சாப்பிடுங்கள்" என்றான்.

விஸ்வநாதன் மிகவும் மகிழ்ந்து, "தாங்கள் எங்களிடம் காட்டும் உதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகின்றோம். ஆகா! என்ன அன்பு? என்ன உபசாரம்? இத்தகைய உத்தம சீலர்களைக் கலியுகத்தில் காண்பது அரிது. ஐயா! வணக்கம்" என்றான்.

அந்த பாலை வாங்கி உள்ளே வைத்தான். மாலை சந்தியா வந்தனம் செய்துவிட்டுச் சாப்பிடலாம் என்று எண்ணினான். அப் பாலில் நஞ்சு கலந்துள்ளது என்பதைக் கபடமற்ற அவன் அறியான். சிறிது நேரங் கழித்து அவன் சத்திரத்திற்குப் பின்புறம் மலசலநீக்கஞ் செய்யச் சென்றான்.

அந்த வேளையில் சத்திரத்துக் காவலாளியின் இரண்டு குமாரர்கள் அங்கு வந்தார்கள். விரூபாட்சி அப்பிள்ளைகளை அன்புடன் கூப்பிட்டு சிறிதுநேரம்பேசியிருந்து, கணவனார் உள்ளே வைத்துள்ள பாலை அப் பிள்ளைகளுக்கு ஆளுக்குப் பாதியாகப் பகிர்ந்து கொடுத்தாள். பிள்ளைகள் அதனைக் குடித்துவிட்டு வீட்டுக்குச் சென்றன. அவ்வளவுதான், சிறிது நேரத்திற்குள் அப்பிள்ளைகள் சுருண்டுவிழுந்து மாண்டுவிட்டன.

விஸ்வநாதன் சந்தியாவந்தனஞ் செய்துகொண்டு மனைவியிடம் வந்து, "பால் எங்கே?" என்று கேட்டான். விரூபாட்சி, "நமது சத்திரத்தையாவின் பிள்ளைகள் வந்தார்கள். அவர்கட்குக் கொடுத்தேன்" என்றாள். "நல்லது நல்லது" என்றான்.

அதற்குப்பிறகு சத்திரத்துக் காவலன் மக்கள் மாண்ட செய்தியறிந்து விஸ்வநாதனும் விரூபாட்சியும் பெரும் வேதனையடைந்தார்கள். "அந்தோ பரம உபகாரியாகிய இவருக்கு இந்தத் துன்பம் வந்திருக்கக்கூடாது. கடவுள் இவனை இப்படி சோதிக்கலாமா? ம்... நல்லவர்கட்குத்தான் நாட்டில் நலிவு வருகின்றது" என்று கூறி அநுதாபம் அடைந்தார்கள்.



காவலன் கவலைக் கடலுள் மூழ்கினான். விரூபாட்சியும் விஸ்வநாதனும் பலமுறை தேற்றினார்கள். "ஐயா! வருத்தப் படாதே. என்னசெய்வது. ஆயிரம் ஆண்டு அழுதாலும் இறந்தவர்கள் எழமாட்டார்கள். ஆனால் அக்குழந்தைகளை நினைத்தால் எங்களுக்குக்கூட நெஞ்சு உருகுகின்றது. மாணட அன்றைக்குக்கூட எங்களிடம் வந்து அன்பாகப் பேசிவிட்டு பாலும் குடித்துவிட்டுச் சென்றார்கள்" என்று கூறினார்கள்.

அதைக்கேட்ட காவலன் திடுக்கிட்டான். தான் அவர்களைக் கொல்லக் கொடுத்த பால் தன் குழந்தைகட்குக் கூற்றுவனாக முடிந்ததை நினைத்துப் பெரிதும் வருந்தினான. வேலிக்கு இட்ட முள் காலுக்கு வந்துவிட்டதைக் கருதி கலங்கினான். அவனுக்குத் துக்கம் ஒரு பக்கம். அவர்கள்மீது ஆத்திரம ஒருபக்கம். அவர்களை அன்றிரவு கத்தியால் குத்திக் கொன்றுவிடவேண்டும் என்று எண்ணி முடிவு செய்தான்.

ஒரு கத்தியைத் தயார் செய்துகொண்டான். இரவு 10 மணிககுச் சத்திரத்தில் ஒரு பக்கம் படுத்துத் தூங்குகின்ற மாதிரி நடித்தான். கள்ளங்கபடில்லாத அத்தம்பதிகள் அந்த அறைக்குள் படுத்து உறங்கிவிட்டார்கள். காலவசத்தினால் விழித்திருந்த காவலன் அயர்ந்து தூங்கிவிட்டான். விடிந்து அவன் எழுந்திருக்கவேயில்லை. தூஙகியேவிட்டான். விடிந்த பின் அவன சுற்றத்தாரும், விஸ்வநாதனும் விரூபாட்சியும் அவன்மரணத்தைக்குறித்துப்பெருந்துன்பமுற்றார்கள். அவனை ஆராய்ந்தபோது விஷந்தீண்டி மாண்டிருக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள். அவன் இடையில் இருந்த கத்தியை விஸ்வநாதனும் விரூபாட்சியுங் கண்டு திடுக்கிட்டார்கள்.

பிறகு இருவர்களும் புறப்பட்டு சென்னை வந்தார்கள். விஸ்வநாதன் "பெண்ணே! அவனன்றி ஓர் அணுவும்அசையாது என்பது முற்றிலும் உண்மையே. அன்று நீ கூறியபோது நான் மறுத்தேன். இப்போது அதை அனுபவத்தில் அறிந்தேன். அச் சத்திரத்துக்காவலாளி நம்மிடம் நடந்தது வஞ்சனை நடிப்பு .அவன் நம்மைக் கொல்ல நஞ்சு கலந்த பாலைத் தந்திருக்கின்றான். இறைவன் கருணை அதனை நாம் உடனே குடிக்கவொட்டாமல் தடுத்தது. அவனுடைய மக்களே அதையுண்டு மாண்டார்கள். அன்றியும் அவன நம்மைக்கொல்லவே ஆயுதத்துடன் அன்று காத்திருந்தான். ஆனால் அரவந்தீண்ட மாண்டான். இரண்டுமுறை அவன் நமமைக் கொல்ல முயன்றான். கடவுள் கருணை நம்மைக் காப்பாற்றியது. அவன் எண்ணம் ஈடேறாது அவனும் அவன் மக்களும்ம அழிந்தார்கள். எல்லாம் ஈசன் செயல்" எனறுகூறி மகிழ்ந்தான். அன்றுதொட்டு ஈசனை நேசமுடன் வாழ்த்தியும் வந்தித்தும் சிந்தித்தும் இனிது வாழ்ந்தார்கள்.

உ
முருகா

# நிலைதெரியாமல் பேசாதே

"பேசப்போனாயோ சாகப்போனாயோ" "யாராலே கெட்டாய்? உன் நோராலே கெட்டாய்" என்பவை நம் நாட்டுப் பழமொழிகள். பேசும்போது நிதானமாகப் பேசவேண்டும். எப்போதும் அமைதியின்றி அவசரப்பட்டுப் பேசக்கூடாது. கறந்த பால் முலையில் ஏறாது. அதுபோல் வாயிலிருந்து வெளிவந்த சொல் ஒருபோதும் உள் திரும்பாது. நமது உடம்பிலே எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. மூளையிலே மட்டும் 10 கோடி நரம்புகள் இருக்கின்றன என்று உடல்நூல் வல்லார் உரைக்கின்றார்கள்.

ஆனால் நமது நாவைமட்டும் நரம்பில்லாமல் ஆண்டவன் மென்மையாகப படைத்துள்ளான். அதுமட்டுமல்ல; ஈரமுள்ளதாகவும் படைத்தான். ஈரத்துடன் பேசிப் பழகவேண்டும். பேச்சில் இனிமை தனிமையான சுவையுடன் இருக்க வேண்டும்.

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.

என்பார் திருவள்ளுவனார்.

பேசுவோர், பேசத் தொடங்குமுன், சொல்லை அளந்து நிறுத்து வகுத்தும் தொகுத்தும் பேசவேண்டும்.

பிறரிடம் தன்னைப்பற்றியே ஓழியாது பெருமைப்படுத்திப் பேசக்கூடாது. பிறர் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசும்போதும் மகிழ்ந்து கேட்டுத் தலையசைக்கக் கூடாது. எத்துணை நற்குணங்களிருப்பினும் நாவடக்கமில்லாதவன் விரைந்து கெடுவான். ஒருசொல் பதினாயிரம் பொன்னைச் செலவழிக்கச் செய்யும். ஒரே சொல் சிறைச்சாலைக்கு அனுப்பும். நாவினால் நலிந்தார் பலர். ஐம்புலன்களை அடக்கும் ஆன்றோர் முதலில் வலிமையாக அடக்க வேண்டியது நாவையே யாகும்.

மேலே பதினாறு வலியவர். கீழே பதினாறு வலியவர். ஆக முப்பத்திரண்டு வலியவர்களுக்கு இடையே மென்மையான நாவைப் படைத்திருக்கின்றார் இறைவர். எச்சரிக்கையாகப் பேசு என்று குறிப்பிடுகின்றார். மூன்று அங்குல நாக்கு சிலர்க்கு முன்னூறு முழம் நீண்டு விருப்பம்போல் பேசி வேதனைப்படுகின்றது; வேதனைப் படுத்துகின்றது.



ஆக்கப் படுத்தும் அருந்தளைவாய் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே.

— வளையாபதி.

ஆதலால் நாவை நனிகாக்க வேண்டும். நன்மைக்கும் தீமைக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் நாவே காரணம் என்பதை மறவாமல் மனதில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

— திருக்குறள்.

துரியோதனன், இந்திரப்பிரஸ்த்தத்தில் உள்ள அரசியல் அரிய மண்டபத்தில் புகுந்தபோது, குளமல்லாத இடத்தில் சிற்பியின் திறமையால் குளமென மயங்கி, ஆடையை இடைவரை தூக்கிக்கொண்டான். பெரிய சபையில், திரௌபதி "இவன் தந்தைக்குத்தான் கண்ணில்லை. இவனுக்குக்குங் கண்ணில்லையா?" என்று கூறி நகைத்தாள். ஏற்கனவே நற்குணம் அமையப்பெறாத அவன் உள்ளத்தில் அதிக வேகத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது அச்சொல்; அதுகாரணமாகவே சூதாடி திரௌபதியை மானபங்கமும் செய்ய முயன்றான்; ஆகவே நாவடக்கமின்மையால் வருந் தீங்கு அநந்தம்.

இன்னும் தன்னிலையறியாமல் பேசுவதனால் வருந் தீங்கைப் புலப்படுத்த வேறு ஒரு எடுத்துக் காட்டும் இங்கு கூறுதும்.

ஒரு கிராமத்திற்கு அருகே அழகிய மகிழ மரத்தின் கீழே மகிழ்ச்சியாக ஒரு சேவல் அமர்ந்திருந்தது. அங்கு ஒரு நரி வந்தது. அது தந்திரத்தில் சிறந்ததன்றோ? சேவலைப் பார்த்து, "அதனைப் பிடித்துக் கொண்டுபோய் பசியாறத் தின்ன வேண்டும்" என்று மனதிற்குள் நினைத்து ஒரு தந்திரத்தை மேற்கொண்டது. "சேவலே! உன் மரபு உயர்ந்தது; முருகவேளே ஆவலாகக் கொடியாகக் கொண்டனர். உன் தந்தையாரைக் கூட எனக்குத் தெரியும். உன் தந்தை பாட நான் கேட்டு மகிழ்ந்துளேன். உனக்கும் பாடத் தெரியுமா? தெரிந்தால் சிறிது பாடு. கேட்டு மகிழ்கின்றேன்" என்று புகழ்ந்து கூறியது. அப்புகழ்ச்சியில் மயங்கிய சேவல், "நரியே! நீ சொல்வது சரியே. நான் நன்றாகப் பாடுவேன். நான் பாடத் தொடங்கினால்தான் சூரிய உதயமேயாகும். என் பாடலைக் கேட்கும் பொருட்டு சூரியபகவானே வருவார் என்றால் அதன் உயர்வைப்பற்றிக் கேட்பானேன்? இதோ பாடுகின்றேன்" என்று கூறி, தன் கண்களை மூடிக்கொண்டு, உச்சமான குரலிலே கூவிப் பாடியது.

அது கண்களை மூடிக் கூவிக்கொண்டிருக்கும் சமயம், நரி ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து, சேவலை ஆவலுடன் தன் வாயினுல் கழுத்தைக் கௌவிப் பிடித்துக்கொண்டு ஓடியது. இடையிலே வந்தவர்கள், "அந்தோ! நமக்குரிய சேவலை நரி தூக்கிக் கொண்டுபோகின்றதே" என்று கூறினுர்கள்.

அதைக் கேட்ட சேவல், "நரியண்ணு! இவர்கள் கூறுவது உன் செவியில் விழவில்லையா? உனக்கு உரியவனுகிய என்னை இவர்கள் தமக்கு உரியவன் என்று நியாயமல்லாமல் கூறுகின்றுர்களே. இது சரியா? நரியண்ணு! நீ வாயை மூடிக்கொண்டு போனுல் அவர்கள் கூறுவதே சரியென்று உலகம் உரைக்குமே? ஆகவே நான் அவர்கள் உடைமையல்ல என்பதையும் உனக்கே சொந்தமான உடைமையென்பதையும், அவர்கள் கேட்டுத் தெளிவடையுமாறு கூறு" என்றது.

நரிக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சி, "ஓய் ஊரவரே! என்ன உளறுகின்றீர்கள். இச் சேவல் எனக்கே உரியது; உமக்கு உரியதன்று" என்று வாய்திறந்து கூறியது; சேவல் பளிச்சென்று நரியின் வாயிலிருந்து தப்பிப் பறந்துபோய் ஒரு மரத்தின்மீது அமர்ந்து, "ஏ! நரியாரே! உனக்கு என்ன வெறியா? நீ கூறுவது சரியா? நான் அவர்கள் உடைமையன்றி உன் உடைமையன்று" என்று கூறிக் கூவியது. நரி ஏமாந்து ஏங்கிச் சென்றது.

நரியின் புகழுரையைக் கேட்டு மயங்கியதால் முதலில் சேவல் இடர்ப்பட்டது. நிலையறியாமல் பேசியதால் நரி கிடைத்ததை யிழந்து ஏங்கியது.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. — திருக்குறள்.

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

*101.* பார்த்தவுடன், வண்டிக்கு ஐந்து முழம் தள்ளியும், குதிரைக்கு பத்து முழம் தள்ளியும், யானைக்கு ஆயிரம் முழம் தள்ளியும் விலகிப்போ. ஆனுல், துஷ்டனைக் கண்டவுடன் அவனை விட்டு வெகுதூரம் ஓடிவிடு.

*102.* கல்லாதான் கல்வி விஷத்திற்கு சமானம். பசி தீர்ந்தபின்பும் புசிப்பது விஷமாகும். சத்சங்கம் தீயவர்களுக்கு விஷம். இள மனைவி கிழப்புருஷனுக்கு விஷம்.

*103.* பாடும் பொழுதும், ஆடும் பொழுதும், அவையில் பேசும்பொழுதும், போர் புரியும் பொழுதும் போஜனம் செய்யும் பொழுதும், (வாத்யங்களை) வாசிக்கும் பொழுதும். கூச்சமின்றி இருப்பது நல்லது. கூச்சம் எல்லாவற்றையும் மறைத்துவிடும்.

உ

முருகா

# திருப்புகழ் புதுப்பாடல் ஒன்று

தணிகைமணி வ.சு. செங்கல்வராயபிள்ளை M.A. அவர்கள், சென்னை

1909 ஆம் ஆண்டு மே மீ 18உ விரிஞ்சி புரத்தினின்றும் ஒரு திருப்புகழ் ஓலைப்புத்தகம் கிடைத்தது. அந்த ஏட்டில் 515 ஆம் பாடலாகப் பின்வரும் பாடல் இருந்தது. பொருள் எளிதில் விளங்காமையால் அந்தப் பாடல் இதுவரையும் எங்கள் திருப்புகழிற் சேர்க்காதிருந்தோம். அண்மையில் திருப்புகழ் அமிர்த ஆசிரியரின் அருமைச் சகோதரர் பெரியார் மதுசூதனசிவம் அவர்கள் ஒரு ஏட்டுப் பிரதியை என்னிடம் காட்டினர். அந்தப் புத்தகத்திலும் இந்தப் பாடல் இருந்தது. எங்களிடம் இருந்தவாறே எழுத்து அமைப்புக்கள் இருந்தன. ஆழ்ந்து பார்த்தபின் அருமைப் பொருள் இப் பாடலுக்கு உள்ளது என்று தெரிந்தமையால் இறைவன் திருவருளை நாடி மேற்சொன்ன இரண்டு பிரதிகளிலும் இருந்தவாறே இங்கு அந்தப் பாடல் அச்சிடப்படுகின்றது. எட்டாவது அடி மாத்திரம் பொருள் வருமாறு சற்று மாற்றப்பட்டுளது. மூலமும் பாடமும் காட்டப்பட்டுளது.

*தனனதன தானதான தனனதன தானதான*
*தனனதன தானதான தனதான*

**நகர**மிரு பாத மாகி **மகர**வயி றுகி மார்பு
நடு**சி**கர மாகி வாய்**வ** கரமாகி-
நதிமுடி**ய** சார மாகி உதயதிரு மேனி யாகி
**நமசிவய** மாமை யாகி எழுதான;
*அகரவுக ரீச ரோம † சகர வுணர் வான சூரன்
அறிவி லறிவான பூர ணமுமாகும்-
அதனை அடி யேனும் ஓதி இதயகம லாலை யாகி
மருவுமவ தான போதம் அருள்வாயே;
குகனு மரு வாண்மை கூர மகரமெனு சாப தாரி
குறையகல வேலை மீது தனியூருங்-
குழவிவடி வாக வேநம் பரதர்தவ மாக மீறு
குலவுதிரை சேரு மாது தனைநாடி;
அகில வுல கோர்கள் காண அதிசயம தாக மேவி
அரிய மண மேசெய் தேக வலைதேடி-
‡அறுமுக விநோத ஞான பரம! யமராசை வீசும்
அசபை சேக சோதி நாத பெருமாளே!

## பொழிப்புரை

ஐந்தெழுத்தில் (பஞ்சாட்சரத்தில்) ந என்னும் எழுத்து (நடராஜமூர்த்தியின் இரண்டு பாதங்கள்(இரண்டு திருவடிகள்); ம என்னும் எழுத்து (அவரது) (திரு) வயிறு ஆகும்; மார்பு (ஐந்தெழுத்தின்) நடுவில் உள்ள சி என்னும் எழுத்து; வாயானது வ என்னும் எழுத்தாகும்.

கங்கை நதியை அணிந்த திருமுடி ய என்னும் எழுத்தின் சாரமாம். இங்ஙனம் தோன்றுவதாகும் (இறைவகை) திருமேனியாக (விளங்கும்) 'நமசிவய' என்னும் அழகு கூடிய (ஐந்து) எழுத்துக்களும்;

அகரம் என்னும் எழுத்தும் உகரம் என்னும் எழுத்தும் ஈசனுருடைய ஓம் என்று கூடின பிரணவத்தின் பொருள் உணர்வைப் பெற்ற சூரபத்மனது அறிவில் அறிவொளியாய் விளங்கினதும், பூரணப் பொருளாய் நின்றதுமான—

அந்தப் பொருளை அடியேனும் ஓதி உணர்ந்து (எனது) உள்ளத் தாமரைப் பொருளாக அது அமையுமாறு என் கவனத்துக்கு உரிய ஞானத்தை அருள்புரிவாயே;

தனது தாய்க்கு உற்ற சாபத்தைப் பொருது குகனும் (முருகனும்) தனக்குள்ள ஆண்மையை (சிவநூலை கடலில் எடுத்தெறிந்து) சிவனார் முன்னிலையில் மிக்குக் காட்டிட, சுறுமீனாகச் சாபம் பெற்ற நந்திதேவரின் குறை நீங்குமாறு கடற்கரையில் தனியாகக் கிடந்த-

குழந்தை வடிவுகொண்டு நமது பரதர் (வலைஞர்) தவத்தின் பயனாக மிக்கு வந்து விளங்கும் கடற்கரையிற் சேர்ந்த மாது (பார்வதியைத் தேடிவந்து)

எல்லா உலகினர்களும் காணும்படியாக, அதிசய உருவத்துடன் (வலைஞனது கோலத்துடன் வந்து, அதே வலைஞர்மகளை) அருமையான (தன் வலை வீசு கைத்திறத்தைக் காட்டி)க் திருமணம் செய்துகொண்டு சென்ற வலைதேடியாகிய சிவபிரானே

---

ஓலையில் உள்ளவாறு பின்வருமாறு:-

*அகரவுகசேத ரோம.‡சகரம்-உடன்கூடிய என்னும் பொருளில் வடசொற்களில் மொழிக்கு முன்னாக வரும் இடைச்சொல்—சமூலம் என்பது போல.

‡ அறுமுகவன் மீதரான பிரவிமருசை வீசும் மசவை செகர் சோதி நாதப் பெருமாளே.

---

"மார்பு நடு" என்பது மார்பை நடுவாகக் கொண்ட இரண்டு தோள்கள் எனக் கொண்டால் உண்மை விளக்கப் பாடலோடு ஒற்றுமைப்படும்.



(தனது ஐந்து முகத்தோடு அதோமுகமும் சேர்த்து) ஆறுமுக விநோதனாகத் தோன்றி அருளிய பரம்பொருளே! எமராஜனை ஓட்டித் தள்ள வல்ல அஜபா மந்திரப் பொருளான ஜகஜோதி நாதப் பெருமாளே!

(போதம் அருள்வாயே)

## குறிப்புரை

**1 முதல் இரண்டடிகளின் குறிப்பு:**

நடராஜமூர்த்தியின் திருவுருவில் நகாரம் திருவடியாகவும், மகாரம் திருவுந்தி (வயிறு) ஆகவும், சிகாரம் திருத்தோளாகவும், வகாரம் திருமுகமாகவும், யகாரம் திருமுடியாகவும் விளங்கும். [பஞ்சாக்ஷர விளக்கம்-பக்கம் 18, 19].

"ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வா முடியப் பார்" (உண்மைவிளக்கம்)

**2 மூன்றாவது அடி:**

சூரபதுமனுக்கு முருகவேள் விசுவரூப தரிசனம் தந்த போது, அவனுக்கு ஞானநிலையையும் அந்நேரத்தில் தந்தனர்:

"ஆறுமா முகத்து வள்ளல் சிறிதுநல் லுணர்ச்சி நல்க
இனையன செப்பலுற்றான்"

அங்ஙனம் ஞான உணர்ச்சியுடன் சூரன் அவ்வுருவைக் கண்டு வியந்து இவனே,

"பற்றிக லின்றி நின்ற பராபர முதல்வன்"

இவனே

"பங்கயன் முதலோர் காணாப் பரமன்"

"யார்க்கும் மூல காரணமாய் நின்ற
மூர்த்தியும் மூர்த்தியன்றோ"

"இப்பொழுதில் ஈசன் இவனெனும் தன்மை கண்டேன்"

(கந்த புராணம்)

எனப் போற்றி நின்றான். அவனுக்கு அப்பொழுது இருந்த ஞான நிலையில் இறைவன் அவன் உள்ளத்தில் "அறிவுக்கறிவான பூரணப் பொருளாய் விளங்கினன்"—என்பதை இப்பாடலின் மூன்றாம் அடி குறிக்கும்.

(5) 5, 6, 7 அடிகள்:

வலை வீசின திருவிளையாடற் சரிதத்தைக் குறிக்கின்றன. அச் சரித்திரத்தின் சுருக்கம்:

இறைவன் மறைப் பொருளை தேவிக்கு உரைத்த பொழுது, தேவி பராமுகமாய் இருந்ததால் 'நீ வலையர் மகளாகுக' எனப் பணித்தார். தேவி "நான் எங்ஙனம் தங்களைப் பிரிந்து வாழ வல்லேன்" என இரங்க, நீ வலைஞர் மகளாய் வளர்ந்து வா; நாம் அப்போது வந்து உன்னை மணஞ்செய்வோம்" என்றனர். தாய்க்கு உற்ற துன்பத்தை அறிந்த முருகவேள் தந்தையார் கையில் இருந்த நூலைப் பறித்துக் கடலில் எறிந்தார். அந்தக் குற்றத்துக்காக முருகவேளை 'வணிகர் வீட்டிலே ஊமையாகுக' என இறைவன் கட்டளையிட்டார். இந்த ஊமைப் பிள்ளைதான் உருத்திர சன்மர். சமயம் அறியாது முருகவேளை உள்ளே விட்ட குற்றத்துக்காக நந்தியை 'ஒரு சுறு மீனாகக் கடலில் உழல்க' என இறைவன் பணித்தார். இறைவன் கட்டளைக்கு இணங்கத் தேவி கடற்கரையில் சிறு குழவியாய் வந்துசேர, பரதர் அரசன் அந்தக் குழந்தையை எடுத்துத் தன் மகளாக வளர்த்துவந்தான். நந்தியும் சுறுமீனாகிக் கடலைக் கலக்கி வலைஞர்களுக்கு இடையூறு பல செய்தது; அந்த மீனை யாராலும் வலையுட் படுத்த முடியவில்லை. இந்த மீனைப் பிடிப்பவனுக்கு என் மகளை மணம் செய்விப்பேன் என்றான் வலைஞர் கோமான். ஒருநாள் சிவபிரானே வலைஞர் வேடத்துடன் வந்து அந்த மீனைத் தன் வலையிற் சிக்கச் செய்தார். பரதர் மன்னன் மகிழ்ந்து தன் மகளை அவருக்கு மணம் செய்வித்தான். சுவாமியும் தேவியுடன் மறைந்து, பரதர் கோமகனுக்கு விண்ணிலே விடைமேற்காட்சியளித்தார்.

8-வது அடி

வலைதேடி வந்த சிவனே ஆறுமுக விநோதன் என்பது. அசவை—என்பது அஜபா மந்திரம். 'அவன் நான்' எனப்படும் சோகம். சோகம் பாவனை என்பது ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றெனப் பாவிக்கை.

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

*104.* பிரஜைகளின் பாபங்கள் ராஜனுக்கு சாரும், ராஜனின் பாபங்கள் புரோஹிதனுக்கு சாரும். மனைவியின் பாபங்கள் புருஷனுக்கு சாரும். சிஷ்யனின் பாபங்கள் குருவிற்கு சாரும்.

*105.* ஒரு விலைமாது மேலும்மேலும் பணம் பிடுங்குவாள். ஒரு தாதிப் பெண் உன்மானத்தைக் கெடுத்துவிடுவாள். ஒரு விதவை உன்னுடைய சரீர பலம் முழுவதையும் போக்கிவிடுவாள். ஒரு அயலான் மனைவி உன் வம்சத்தையே வேருடன் அழித்து விடுவாள்.

உ

முருகா

# இளைஞர் மன்றம்

(வேலூர் அன்பன் மு. பெருமாள்)

திங்களூரில் தினகரன் என்பவர் இளைஞர் மன்றம் என்ற ஒன்றை நிறுவி எழிலாகத் தொண்டுகள் இயற்றி வந்தார். ஊரிலுள்ள இளைஞர்களை ஒன்றுகூட்டி அவர்கட்கு உழைப்பின் உயர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும், இறைவழிபாட்டின் இன்றியமையாமையையும், கல்வியில் கருத்தூன்ற வேண்டுவதையும், அறநூல்களின் ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்தி, மக்கள் முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டிய சமய சேவைகளையுங்குறித்துப் போதித்து, அவைகளை அடிப்படைத் திட்டமாகக்கொண்டு பல நல்ல தொண்டுகள் செய்து வந்தார்.

ஊரின் ஒதுக்குப் புறத்தில் ஓர் அழகிய மண்டபம் கட்டப்பட்டது. அதன் அருகே ஆற்றங்கரை. அடுத்து சாலை மரங்களும், சோலை வயல்களும் சூழ்ந்து நிற்கின்றன. நல்ல காற்று; திறந்தவெளி. அங்கு அனுதினமும் மன்றத்தின் உறுப்பினர்கள் அதிகாலை ஐந்து மணிக்குப் பிரார்த்தனைக்காகக் கூடுவார்கள். ஆரம்பத்தில் ஐந்து நிமிடம் மௌனம் நிலவும். பின்னர் ஒருவர் சொல்ல மற்றவர்கள் தொடர்ந்து சொல்ல திருவாசகப் பாராயணம் நிகழ்த்துவார்கள். அரைமணி கழித்து அனைவரும் கையில் விளக்குமாறு, கூடை மண்வெட்டியுடன் கூட்டமாகக் கிளம்புவார்கள். முதலில் ஊரிலுள்ள கோயில்களைக் கூட்டிச் சுத்தம் செய்வார்கள். தொண்டுசெய்யும்போதும் யாவரும் ஒரே இனிமையான குரலில் கந்தரநுபூதியைப் பாராயணம் செய்தவண்ணமாகவே தொண்டு செய்வார்கள்.

பின்னர் தெருக்களில் கூட்டிப் பெருக்குவார்கள். நெற்றியில் நீறணிந்து, நாவினால் இறைவன் நாமத்தை நவின்ற வண்ணம் நல்ல தொண்டாற்றும், இந்தத் திருக்கூட்டத்தின் காட்சியைக் கண்டு யார் உள்ளம்தான கவராதிருக்கும். ஊரிலுள்ள பெண்களும், ஆண்களும் உள்ளமுவந்து அவர்களுடன் கலந்து ஒத்துழைத்துத தொண்டாற்ற முற்பட்டார்கள்.

பின்னர் காலை 8 மணிக்கு மன்றத்துக்குத் திரும்பிவந்து "ஆறிருதடந்தோள் வாழ்க", "வான்முகில் வழாது பெய்க" என்ற வாழ்த்துரைகளைக் கூறி முடித்து அவரவர்கள் தொழில்களுக்குச் செல்வார்கள்.

மாலை 5 மணிக்கு மன்ற அன்பர்கள் மண்டபத்தில் கூடி ஒரு மணி நேரம் பிரார்த்தனை செய்வார்கள். பின்னர் அவர்களுக்குள்ளே பேச்சும், ஆராய்ச்சியும் நிகழும். இரவு 8மணிக்கு ஊரிலுள்ள கல்வியறிவில்லாத வயதுவந்தவர்களுக்குக் கல்வி போதிப்பார்கள். இரவு ஒன்பது மணிக்கு வழக்கம்போல் வாழ்த்துரைகளைப் பாடி முடித்துவிட்டு அவரவர்கள் இல்லத்துக்குச் செல்வார்கள்.

ஒருநாள் மாலைப் பிரார்த்தனை முடிந்து பேச்சுத் தொடங்கியது. அதுசமயம் ஒரு 'சீர்திருத்தவாதி' அன்பர் அங்கு வந்தார். அவர் தலைவர் தினகரனை அணுகி, "தங்கள் மன்றத்தின் சார்பாக நிகழும் நல்ல தொண்டுகள் யாவும் என் மனதைக் கவர்ந்து மகிழ்ச்சியளிக்கின்றன. எனவே தங்களுடன் சேர்ந்து தொண்டாற்ற விரும்புகின்றேன். அனுமதி கிடைக்குமா?" என்று கேட்டார். "ஆகா அன்போடு தங்களை வரவேற்க காத்திருக்கின்றோம். தாராளமாக வரலாம். வேற்றுமையே கிடையாது இங்கு.

ஆனால் ஒரு சந்தேகம். அதாவது தங்களுடைய கடவுள் வழிபாட்டில்தான்.

அன்பரே! விளக்கமாகக் கூறுங்கள் விடை கூறுகின்றேன்.

இந்த நாட்டில் வாழும் பிற மதங்களைச் சார்ந்த கிறிஸ்துவர்களுக்கு ஒரே தெய்வம், ஒரே போதகர் (ஏசுகிறிஸ்து), ஒரே நூல் (பைபிள்). மகம்மதியர்களுக்கும், ஒரே தெய்வம், ஒரே போதகர் (மகம்மதுநபி). ஒரே நூல் (குரான்). பௌத்தர்களுக்கும், பார்சிகளுக்கும், சீக்கியர்களுக்கும், இன்னும் உலகிலுள்ள ஏனைய மதங்கட்கும் இங்ஙனமே இருக்கின்றன. இதனால் மத சம்பந்தமான விஷயத்தில் குழப்பமில்லாமல் வாழ முடிகின்றது அவர்கட்கு.

ஆனால் இந்துக்களாய் இருப்பவர்கட்கு எல்லாம் பன்மையாக இருக்கின்றன. எத்தனை தெய்வம்? எத்தனை நூல்கள்? எத்தனை போதகர்கள்? இந்துமதத்துக்கு வரவிரும்பும் ஒருவருக்கோ, அல்லது இந்து மதத்தில் இருப்பவர் ஒருவருக்கோ, எந்த நூலைப் பின்பற்றி யாரைப் போதகராகக் கொள்வது என்பதில் குழப்பமாக அல்லவா இருக்கின்றது?

தினகரன்—சாமான்கள் வாங்கக் கடைவீதிக்குச் சென்று ஐயோ இத்தனை கடைகளா? ஜவுளிக்கடைகளாக எத்தனை இருப்பது? மளிகைக்கடைகளாக ஏன் இத்தனை? எந்தக் கடையில் சாமான்கள் வாங்குவது என்று புரியாமல் குழப்பமாகவல்லவா இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் ஒரே கடையாக இருந்தால் நலமாக இருக்குமே என்பதுபோல் இருக்கின்றது உமது கேள்வி.

விளக்கமான விடை கூறுகின்றேன். கவனிப்பீர்களாக.

இன்று உலகத்திலுள்ள மதங்கள் யாவற்றிற்கும் இந்து மதம் நீங்கலாக, அவை தோன்றிய கால எல்லை அளவு உண்டு. காரணம் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மகான்களால் அவர்கள் தோன்றியபோது, தோன்றியதாகும். ஆயின் இந்து மதம் ஆண்டவனால் தோற்றம் செய்யப்பட்டதாகும். ஆகவே இந்துமதத் தோற்றத்தின் கால எல்லையைக் கணக்கிட்டுக்கூற முடியவில்லை. இன்றைக்கு கிறிஸ்துவ மதம் தோன்றி இருப



தாம் நூற்றாண்டு என்றும், மகம்மதிய மதம் தோன்றி பதினான்காம் நூற்றாண்டு என்றும், இன்னும் பிற மதங்களின் தோற்றத்தை இங்ஙனமே குறிப்பிட்டுக் கூற முடிகின்றது. கி—மு. கி—பி. என்பதுபோன்று இ—மு. இ-பி. என்று கூற முடியாதல்லவா?

மற்ற மதங்கள் இந்த ஒரு யுகத்தின் இறுதியாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் தோன்றியதால் ஒரே போதகரும், ஒரே மதநூலும் இருக்க முடிகின்றது. இந்துமதம் பல யுகங்களைக் கொண்டதல்லவா? பல யுகங்களில் தோன்றிய, பல மகான்களுடைய ஆராய்ச்சி, அனுபவங்களை விவரிக்கும் வாய்ப்பு இந்து மதத்துக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. ஆண்டவனால் அநுக்கிரகம் செய்யப்பட்ட வேதத்தை, உலக இயல்புக்காக நான்கு பகுதிகளாக வகுத்தும், தொகுத்தும், விவரித்தும், சுருக்கியும், தாங்கள் கண்ட ஆராய்ச்சிகளை மகான்கள், நான்கு வேதங்கள், ஆறு அங்கம், உபநிடதம், ஆகமம் கீதை, பதினெண் புராணங்கள், இதிகாசம் சிவஞானபோதம், தேவாரம், திருப்புகழ், திவ்வியப்பிரபந்தங்கள் என்ற நூல்களாக வெளியிட்டு மக்கட்கு உதவியுள்ளனர். இந்துமதத்திலுள்ள இத்தனை நூல்களும் வேதம் என்ற ஒரே கயிற்றில் கோர்க்கப்பட்ட மணிகளாகும். வேதம் ஒன்றையே எல்லா அறநூல்களும் அடிப்படையாகக்கொண்டு விளங்குகின்றன.

எனவே மேலே மொழிந்த அறநூல்களில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கோளாகக்கொண்டு இறைவழிபாடு நிகழ்த்தினால், இறைவனருளைப் பெறலாம் என்பதில் ஐயம் வேண்டாம். இந்துமத நூல்களின் மகிமையைவிளக்க ஆண்டவன் அடிக்கடி இந்த உலகில் மகான்களை இந்த புண்ணிய பூமியான பாரத நாட்டில் தோன்றச் செய்துகொண்டேயிருக்கின்றார்.

ஆனால் ஒரு ஏசுநாதருக்குப்பின் அவருக்குச் சமமான ஒரு கிருஸ்துவ மகானும் இதுவரையில் தோன்றவில்லை. அவர்கள் வேதமான பைபிளுக்குச் சமமான நூல் ஒன்றும் தோன்றவில்லை. மற்ற மதங்களின் நிலையும் இதுவே. ஆகவே அவர்கள் ஒருவரையே போற்றி ஒரு நூலையே பின்பற்றவேண்டியிருக்கின்றது.

இந்துமதத்தின் சார்பாக இந்த நூற்றாண்டில்கூட வடக்கே இராமகிருஷ்ணபரமஅம்சர், விவேகானந்தர், காந்தியடிகள், தெற்கே இராமலிங்கவள்ளலார், பாம்பனசுவாமிகள் முதலானவர்கள் தோன்றி அறபோதனைகளைப் போதித்து பல அற்புதங்களைச் சாதித்துள்ளனர். ஆக இவையாவும் இந்த நூற்றாண்டுவாசிகள் கண்ட உண்மைதானே.

எனவே இந்துமதத்தில் பல நூல்களும், பல போதகர்களும் இருப்பது அதன் எல்லையற்ற வளர்ச்சியையும், சிறப்பை

யும் காட்டுகின்றனவேயொழிய வேறில்லை. இதேபோன்று ஒரே இறைவன் தான் அடியார்கள் பொருட்டு பல வடிவங்கள் தாங்கி காட்சியளிக்க நேர்ந்துள்ளது. காரணம் இந்து புராண வரலாறுகள் கூறும்.

எனவே அவரவர்கள் அறிவு மனபரிபக்குவத்துக்கு ஏற்ற அளவில், இறைவழிபாடு செய்து இன்னருள் பெற இந்துமதம் சிறந்த வழிகாட்டி வருகின்றது. தங்கள் சந்தேகம் இன்னும் தீர்ந்ததா இல்லையா?

இதுகாறும் தாங்கள் கூறிய விளக்கம் என் ஐயத்தைத் தீர்த்துவிட்டது. ஆயின் மற்றொரு ஐயம். அதாவது மாட்டையும், ஆட்டையும் கொன்று புசிப்பது மகாபாவம் என்று கூறுகின்ற தங்கள் போன்றவர்கள், அதன் தோலால் தைத்த மிதியடிகளை அணிவதுமட்டும் பாவமாகாதா?

ஒருகாரியம் செய்வதினால் உண்டாகும் நன்மையும், தீமையும் அதன் முக்கியக் குறிக்கோளையே சார்ந்து நிற்கும். அதன் சார்பாகப் பயன்படும் விதங்களை அவை பாதிக்காது. உதாரணமாக ஒருவன் குரோதத்தால் மற்றவனைக் கொலை செய்துவிடுகிறான். அது பாவமும் தவறுமாகும். ஆனால் கொலையுண்ட பிரேதத்தை அடக்கம் செய்த பின்னர், அதைச் செல்லும், மண்ணும், நரியும் சேதம் செய்வது பாவமும் தவறுமாகாது. அது போன்று பிராணிகளை தின்பதற்காக கொலை செய்வது பாவமாகும். ஆனால் கொன்றபின் உண்பதற்குப் பயன்படாது, புறக்கணிக்கப்படும் அதன் தோலை, அதிலும் வீணாகப்போவதைக் காலுக் கணியாகக் கொள்வது எங்ஙனம் பாவமாகும்? மேலும் தோல் உயர்திணையல்லவே.

தங்கள் விடை என் ஐயத்தைப் போக்கிவிட்டது. எனவே இன்றுமுதல் தங்களில் ஒருவனாக இருந்துத் தொண்டாற்றும் முடிவுக்கு வந்துவிட்டேன்,

தினகரன் - 'சீர் திருத்தவாதி' என்று கூறுவது சரியான வார்த்தையாகுமா? சீர்—திருத்தம். அதாவது சீரைத் திருத்தினால் என்னவாகும்? சீர் அல்லாதவைதானே அதன் நேரான பொருள்? அன்பரே! இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

ஆம் புரிகின்றது. உணர்ச்சி பிரசார வேகத்தில் உள்ளதைப் பறிகொடுத்து, உண்மைக் கருத்தையும் ஆராயாமல் இதுபோன்ற சொற் பிரயோகங்களை, சொன்னதைச் சொல்லும் கிளியெனச் சொல்லும் என்போன்றவர் பலர் இருக்கின்றனர். [illegible] இதுபோன்ற ஆக்கவேலைக்கு என்று பயன்படு வார்[illegible] திருவருள் அவர்கட்கு நல்லறிவு தருவதாக.

வேலும் மயிலும் துணை.

182380